www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Examination - 2021

FWC

ஐரோப்பிய வரலாறு - I
Europe History - I

Three Hours ten min | Gr -13 (2021) | 25B | T | I

**கவனிக்க.**

- எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை அளிக்குக.
- சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுக்க.
- வழங்கப்பட்டுள்ள நேரம் பகுதி I, பகுதி II இற்கும் உரியதாகும்.

❖ *1 – 10* வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்கள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) 1. பிரனீஸ் 2. அல்பஸ் 3. அஸ்பென்னைன்ஸ்
4. கோகஸஸ் 5. அப்பலாசியன் ( )

2) 1. செயூஸ் 2. அப்பலோ 3. அதீனா
4. அபரோடைற் 5. மினோவா ( )

3) 1. முடியாட்சி 2. உயர் குடியாட்சி 3. கடவுள் ஆட்சி
4. கொடுங்கோலாட்சி 5. ஜனநாயகம் ( )

4) 1. ஒகஸ்ற்றஸ் 2. ட்ராஜன் 3. ஹட்ரியன்
4. ஸ்பார்தகஸ் 5. மார்கஸ் ஒரேலியஸ் ( )

5) 1. அங்கலர் 2. சக்ஸோனியர் 3. பற்றீசிரியர்கள்
4. ∴பராங்குகள் 5. ஹீனர் ( )

6) 1. பொலஞ்ஞா 2. லைஸியம் 3. பாரிஸ்
4. ஒக்ஸ்போர்ட் 5. கேம்பிரிடஜ் ( )

7) 1. கடலோடி ஹென்றி 2. யூலியற் 3. லாசலே
4. மார்குயிற் 5. ஹென்றி ஹட்சன் ( )

8) 1. பதினைந்தைம் லூயி 2. மக்ஸிமிலியன் 3. நான்காம் கிறிஸ்ரியன்
4. வலன்ஸ்ரைன் 5. ஸ்ராவஸ் அடோல்பஸ் ( )

9) 1. கலோன் 2. மிராவே 3. அபேசைஸ்
4. மாறற் 5. டன்ற்ரன் ( )

10) 1. சர்வதேச நாணய நிதியம் (IMF)
2. சர்வதேச நீதிமன்றம் (ICI)
3. ஐக்கிய நாடுகுள் சிறுவர் நிதியம் (UNICEF)
4. வட அத்திலாந்திக் உடன்படிக்கை நிறுவனம் (NATO)
5. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் (UNDP) ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

❖ **11 – 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று பொருந்தவில்லை. அச்சோடியைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11) 1. ஹோமர் - ஒடிஸி
2. சோபோகிளிஸ் - ஒடிபஸ் றெக்ஸ்
3. அரிஸ்ரோபேன்ஸ் - முகில்கள்
4. சோக்கிரட்டிஸ் - அரசியல்
5. பிளேட்டோ - குடியரசு ( )

12) 1. ஹப்ஸ் பேர்க் - இங்கிலாந்து
2. தியூடா - இங்கிலாந்து
3. ஸ்ருவார்ட் - இங்கிலாந்து
4. ஹனோவர் - இங்கிலாந்து
5. வின்டஸர் - இங்கிலாந்து ( )

13) 1. போர்த்துக்கல் - பிறேசில்
2. ஸ்பானியா - மெக்சிகோ
3. நெதர்லாந்து - பிலிப்பைன்ஸ்
4. இங்கிலாந்து - இந்தியா
5. பிரான்ஸ் - இந்தோனேசியா ( )

14) 1. V.I லெனின் - தொழிலாளர் சர்வதிகாரம்
2. அலெக்ஸாந்தர் கெரென்ஸ்கி - புதிய பொருளாதாரக் கொள்கை
3. ஜோசப் ஸ்டாலின் - ஒரு தேசத்தின் சமவுடமை
4. நிகிதா குருஷேவ் - கிளாஸ்னோஸ்ட்
5. மிகைல் கொர்ப்பர்சேவ் - பெரஸ்ரொய்கா ( )

15) 1. ஜிரொண்டினார் - ஸ்பானியா
2. ஜேகுபினர் - ∴பிரான்ஸ்
3. நாட்சிஸம் - ஜேர்மனி
4. பாஸிசம் - இத்தாலி
5. மென்செவிக்கினர் - ரஷ்யா ( )

• **16 – 20 வரையான வினாவுக்களுக்கு X ,Y என நிரல்களில் பொருந்தக்கூடிய வகையில் தொடர்படுத்தும் போது வரும் சரியான சேர்மானத்தின் விடையை இனங்கண்டு அவற்றுக்குரிய இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16)

| X | Y |
|---|---|
| 1. மானியமுறை | A. தனிநபர் வாதம் |
| 2. முதலாளித்துவம் | B. சோசலிஸம் |
| 3. மறுமலர்ச்சி | C. மானுடவாதம் |
| 4. புதிய நாடுகளின் கண்டுபிடிப்புகள் | D. காலணித்துவம் |
| 5. போல்ஷேவிக் புரட்சி | E. பொதுவுடமைவாதம் |

1. EABDC 2. EBDAC 3. ECDAB 4. EDBCA 5. EACDB ( )



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

17) X | Y

1. முப்பதாண்டுப்போர் — A. பாரிஸ் ஒப்பந்தம்
2. நெப்போலியனின் போர்கள் — B. வேர்சேல்ஸ் உடன்படிக்கை
3. கிருமியப் போர் — C. பூர்ட்ஸ்மத் உடன்படிக்கை
4. ரஷ்ய ஜப்பானியப் போர் — D. வெஸ்ர்ட் ∴பேலியா உடன்படிக்கை
5. முதலாம் உலகப்போர் — E. வியன்னா மாநாடு

1. DCEAB 2. CEABD 3. DEACB 4. BEACD 5. EDACB ( )

18) X | Y

1. மாண்புமிகு புரட்சி — A. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்
2. அமெரிக்கப் புரட்சி — B. சமாதானம், நிலம், உணவு
3. பிரெஞ்சுப் புரட்சி — C. புத்திமான்களின் புரட்சி
4. 1848 ஆம் ஆண்டு புரட்சி — D. அரசர் மீது பாராளுமன்றம் வெற்றி கண்டனம்
5. ரஷ்யப்புரட்சி — E. பிரதிநிதித்துவம் இன்றி வரியும் இல்லை

1. DCEAB 2. CEABD 3. DEACB 4. BEACD 5. EDACB ( )

19) X | Y

1. றைன் ஒன்றியம் — A. பிஸ்மார்க்
2. ஜேர்மன் ஒன்றியம் — B. முதலாம் நெப்போலியன்
3. வடஜேர்மன் ஒன்றியம் — C. முதலாம் கைசர் வில்லியம்
4. ஜேர்மன் பேரரசு — D. ஹிண்டன் பேர்க்
5. வைமார் குடியரசு — E. வியன்னா மாநாடு

1. DCEAB 2. CEABD 3. DEACB 4. BEACD 5. EDACB ( )

20) X | Y

1. குச்சுக்கைனார்ஜி உடன்படிக்கை — A. ரஷ்யாவும் ஜேர்மனியும்
2. விலா∴பராங்கா உடன்படிக்கை — B. பிரான்சும் ஜேர்மனியும்
3. ப்ராங்பேட் உடன்படிக்கை — C. ரஷ்யாவும் ஜப்பானும்
4. போட்ஸ்மத் உடன்படிக்கை — D. பிரான்சும் ஒஸ்திரியாவும்
5. பிறென்ற் - லிற்ரோவ்ஸ்க் உடன்படிக்கை — E. ரஷ்யாவும் துருக்கியும்

1. EBDAC 2. DECAB 3. EDBCA 4. CAEBD 5. BEACD ( )

- ***21 – 25 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்கு பொருந்தவில்லை அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.***

21) நாடுகாண் பயணங்களுக்குத் துணை புரிந்த காரணம்

1. ஆசியப் பொருட்களை ஐரோப்பாவில் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட சிக்கல்.
2. விஞ்ஞான வளர்ச்சியால் உபகரணங்கள் செய்யப்பட்டமை.
3. தேசிய அரசுகளின் ஆட்சியாளர்கின் அனுசரனை.
4. 1453ஆம் ஆண்டு முஸ்லிம்களால் தேற்கடிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் தமது தோல்வியை நிவர்த்தி செய்யும் நோக்கம்.
5. இத்தாலியும் ஜேர்மனியும் ஐக்கியமடைந்ததால் ஏற்பட்ட அரசியல் நிலைப்பாடு. ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

22) தேசிய அரசினை கட்டியெழுப்புவதுடன் தொடர்புடைய மன்னர்கள்.
1. பர்டினைட் இசபெல்லா.
2. 16ம் லூயி மன்னன்.
3. முதலாம் சார்ள்ஸ் மன்னன்.
4. ஏழாம் ஹென்றி மன்னன்.
5. நான்காம் ஹென்றி மன்னன். ( )

23) இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டமைக்கான காரணம் யாது?
1. இங்கிலாந்தில் மானிய முறை வீழ்ச்சியுற்றமை.
2. நாட்டில் இயற்கை வளங்கள் இருந்தமை.
3. குடியேற்ற நாடுகளிலிருந்து மூலப் பொருட்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.
4. புவியியல் ரீதியாக நாடு சிறிய தீவாக இருந்தமை.
5. பிரான்சிஸ்யப் புரட்சியின் தாக்கம் இங்கிலாந்தை வந்தடைந்தமை. ( )

24) முப்பதாண்டுப் போர்.
1. கத்தோலிக்க நாடுகளுக்கும் சீர்திருத்தவாத கிறிஸ்தவ நாடுகளுக்கும் இடையிலான போராக ஆரம்பித்தது.
2. போர் பிரதானமாக ஜேர்மனியில் நடைபெற்றது.
3. ஒக்ஸ்வேர்க் சமாதானத்தின் குறைபாடுகளே போருக்கான பிரதான காரணமாகும்.
4. ஐரோப்பாவில் நடைபெற்ற இறுதிச்சமயப் போராக இது கருதப்படுகிறது.
5. போரின் முடிவில் ∴பிரான்ஸ் தோல்வியடைந்தது. ( )

25) மறுமலர்ச்சி
1. மறுமலர்ச்சி இத்தாலியில் ஆரம்பமானது.
2. சமய சீர்திருத்தத்தின் விளைவாக அது ஏற்பட்டது.
3. பின்னர் மறுமலர்ச்சி ஐரோப்பாவிலுள்ள வேறு நாடுகளுக்குப் பரவியது.
4. மறுமலர்ச்சி சமுதாயத்தில் உலகியல் நோக்கு கூடுதலாக முனைப்புப் பெற்றது.
5. மனித நேயவாதம் மறுமலர்ச்சியின் குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். ( )

❖ **26 – 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (A) (B) (C) (D) என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்து.**

**(A) யும் (B) யும் மட்டும் சரியாயின் ……………… 1 எனவும்**

**(B) யும் (C) யும் மட்டும் சரியாயின் ……………... 2 எனவும்**

**(C) யும் (D) யும் மட்டும் சரியாயின் ……………... 3 எனவும்**

**(A) யும் (C) யும் மட்டும் சரியாயின் ……………... 4 எனவும்**

**ஒருவிடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் அடைப்புள்ளிக் கோட்டில் எழுதுக.**

| அறிவுறுத்தல்கள் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | ஒருவிடை அல்லது இரண்டுக்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் |



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

26) எதிர்மத சீர்திருத்தம் தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களில் எது / எவை சரியானவை?
   A) உரோம கத்தோலிக்க திருச்சபைக்கு எதிரான இயக்கமாக எதிர்மதச் சீர்திருத்தம் எழுச்சி பெற்றது.
   B) எதிர்மதச் சீர்திருத்தத்தின் ஒரு முக்கிய மூலமாக யேசுசபை காணப்பட்டது.
   C) ஸ்பெயினில் 1479 மத விசாரணை மன்று ஏற்படுத்தப்பட்டது.
   D) புரட்டஸ்தாந்து கோட்பாடுகளை ரென்றில் கூடியசபை வரையறுத்து தெளிவாக்கியது ( )

27) மேல்வருவனவற்றில் இங்கிலாந்திலே பாராளுமன்ற ஆட்சிமுறை வளர்ச்சியுறுவதற்குப் பொறுப்பாக இருந்த சட்டங்கள் யாவை?
   A) 1989 ஆம் ஆண்டு உரிமைகள் பற்றிய சட்டம்.
   B) 1928 இல் சர்வஜன வாக்குரிமைகள் ஏற்பட்டமை.
   C) 1735 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் மந்திரிசபை முறையை அறிமுகஞ் செய்த சட்டம்.
   D) 1767 ஆம் ஆண்டு ரவுன்செண்ட் நிறைவேற்றிய வருமான வரிச்சட்டம். ( )

28) மேல்வருவோரின் பிரான்சின் முதலமைச்சர்களாக விளங்கியோர் யாவர்?
   A) ஹென்றி ஹட்ஸன் B) றிச் செலியூ C) மஸாறின் D) வோல்ற்ரேயர் ( )

29) சர்வதேச சங்கம் தொடர்பான மேல்வரும் கூற்றுகளில் சரியானது / சரியானவை எது / எவை?
   A) முதலாம் உலகப்போரின்பின் சர்வதேச சங்கம் அமைக்கப்பட்டது.
   B) சர்வதேச தகராறுகளைத் தீர்ப்பதும் மீண்டும் போர் ஏற்படுவதைத் தடுப்பதும் சர்வதேச சங்கத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.
   C) ஐக்கிய அமெரிக்கா சர்வதேச சங்கத்தின் ஒரு பிரதான அங்கத்துவ நாடாகும்.
   D) அபிசீனியா மீது இத்தாலி படையெடுப்பதை சர்வதேச சங்கத்தினால் தடுக்க முடிந்தது. ( )

30) மேல்வருவனவற்றில் இரண்டாம் உலகப்போருக்கு வழி வகுத்த காரணங்கள்
   A) ஜேர்மனியின் நாசிசம் எழுச்சி பெற்றமை.
   B) ரஷ்யா இத்தாலி என்பவற்றுக்கு இடையிலான காலனித்துவம் போட்டி
   C) சர்வதேச சங்கம் தோல்வியுற்றமை.
   D) ஐக்கிய அமெரிக்கா ஜேர்மனிக்கு ஆதரவு புரிந்தமை. ( )

- **இல 31 – 35 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அடைப்புப் புள்ளிக்கோட்டில் அதன் இலக்கத்தை எழுதுக.**

31) முதலாவது உரோமப் பேரரசனாக கருதப்படுபவர் யார்
   1) மகா அலெக்சாந்தர் 2) யூலியஸ் சீஸர் 3) ஒகஸ்டஸ்
   4) குளோடியஸ் 5) மார்க்கஸ் ஒரோலியஸ் ( )

32) கைத்தொழில் புரட்சிக் காலத்தின் பிரதான கண்டுபிடிப்புக்கள்
   1) காற்றாலை 2) பறக்கும் தறி 3) நூல் நூற்கும் ஜெனி
   4) நீர் சட்டம் 5) நீராவி இயந்திரம் ( )

33) “தாய்” என்னும் நூலின் ஆசிரியர் யார்,
   1) ஐவன் துர்கினீவ் 2) பொய்டர் டொஸ்ரோ யெவ்ஸ்கி
   3) லியோ ரோல்ஸ்ரோய் 4) ஹென்றிக் இப்சன் 5) மார்க்ஸிம் கோர்க்கி ( )



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

34) ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் முதலாவது சான்சலர் யார்?
1) கொன்ட்றாட் அடினோர் 2) வில்லி பிரான்ற் 3) கூட் கீசிங்கன்
4) ஹெல்மட் சிமித் 5) ஏரிக்கொனேக்கர் ( )

35) சோலியற் யூனியனின் ஆட்சியாளர்
1) நிரித்தா குருசேவ் 2) பிராங்கிலின் ரூஸ்வெல்ட் 3) வின்ஸ்ட் சேர்ச்சில்
4) மிராபோ 5) ஜோஜ் மார்ஷல் ( )

- **இல 36 – 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிகளுக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருந்துவதை எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| | **முதலாவது கூற்று** | **இரண்டாவது கூற்று** |
|---|---|---|
| 1. | சரியானது | பிழையானது |
| 2. | சரியானது | சரியானது |
| 3. | பிழையானது | பிழையானது |
| 4. | பிழையானது | சரியானது |
| 5. | சரியானது | சரியானதும் முதல் கூற்றினை நன்றாக விளக்குவதாகும். |

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| 36) | பெலொப்பனீசியப் போரினைப் பற்றி ஒரு வரலாற்று நூலை எழுதிய தியூசிடிஸ் என்பவரை “வரலாற்றின் தந்தை” என்பர். | கி.பி 75 – 85 ஆகிய காலத்தில் ஒரு பொழுதுபோக்கு நிலையமாக உரோம சக்கரவர்த்திகளால் பார்த்தீனன் அமைக்கப்பட்டது. ( ) |
| 37) | மத்திய காலத்தில் ஐரோப்பாவிலே கிறிஸ்தவ சமயத்தை ஆதாரமாகக் கொண்டு ஒரு பொதுவான நாகரிகம் உருவானது. | முற்கால மானிட வாதிகளில் ஒருவரான பெற்றாக்கைச் சிலர் மானிடவாதத்தின் தந்தையெனக் கொள்வர். ( ) |
| 38) | பதினைந்தாம் நூற்றாண்டில் நடைபெற்ற போர்த்துக்கேயரின் நாடுகான் பயணங்கள் பிறெஸ்ற்றர் - ஜோன் என்பவரின் ஆதரவில் நடைபெற்றன. | முப்பதாண்டுப்போரின் முடிவில் பரிசுத்த உரோமப் பேரரசு ஐரோப்பாவின் வலிமிக்க வல்லரசாகியது. ( ) |
| 39) | “பிரெஞ்சுப் புரட்சியின் குழந்தை” என்று நெப்போலியன் பொனபாட்டை வர்ணிப்பர். | நெப்போலியன் பொனபாட். பிரான்ஸின் பேரரச ஆவதற்கு பிரான்ஸிய புரட்சி வழிவகுத்ததோடு புரட்சியினால் ஏற்பட்ட சாதனைகள் பலவற்றை அவர் முன்னெடுத்துச் சென்றார். ( ) |
| 40) | சோலியற் யூனியனும் அதன் கட்டுப்பாட்டிலிருந்த அரசுகளும் 1955 இல் ஏற்படுத்திய பரஸ்பரம் பாதுகாப்பு உடன்படிக்கை வார்ஸோ உடன்படிக்கை என்று சொல்லப்படும். | முதலாம் உலக மகா யுத்த முடிவில் நட்பு சோவின் ஒன்றியம் சீர் குலைந்ததும் பனிப்போர் முடிவுற்றது. ( ) |



agaram.lk

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Examination - 2021

FWC

ஐரோப்பிய வரலாறு - II
Europe History - II

Gr -13 (2021)

25B | T | II

அறிவுறுத்தல்கள் :
- வினாத்தாளை விளங்கிக்கொள்வதற்காக மேலதிகமாக பத்து நிமிடங்கள் வழங்கப்படும். (மொத்தமாக 3 மணித்திலாயங்களும் பத்து நிமிடமும்)
- முதலாம் வினா கட்டாயமானது.
- அத்துடன் பகுதி B இலிருந்து ஒரு வினாவையேனும் பகுதி C இலிருந்து ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக. (முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை நான்கு ஆகும்).
- முதலாம் வினாவுக்கு விடை அளிப்பதற்கு ஐரோப்பிய புறவுருவப்படம் வழங்கப்படும்.

## பகுதி A

1) உமக்கு வழங்கப்பட்டுள்ள ஐரோப்பிய புறவுருவப் படத்தில் கீழே தரப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1. எதென்ஸ் | 2. ஏஜியன் கடல் | 3. ரைன்நதி | 4. போலாந்து |
| 5. மன்செஸ்ற்றர் | 6. ஒஸ்திரியா | 7. சிசிலி | 8. கீல்கால்வாய் |
| 9. டன்ஸிக் | 10. லண்டன் | 11. கொன்ஸ்தாந்திநோபிள் | 12. ரைபர்நதி |

(12x1=12 புள்ளிகள்)

## பகுதி B

2) உரோமாபுரி ஒரு சிறிய லத்தீன் இராச்சியமாகவிருந்து பரந்தவொரு பேரரசாக வளர்ந்தமையிலுள்ள பிரதான கட்டங்களை பரிசீலனை செய்க.

(16 புள்ளிகள்)

3) மறுமலர்ச்சிக் கால கட்டத்தில் பின்வரும் துறைகளில் ஏற்பட்ட அபிவிருத்திகள் தொடர்பாக பரிசீலனை செய்க.

i) கலை கட்டக்கலை

ii) அரசியலும் ஆட்சிமுறையும்

iii) விஞ்ஞானம் (16 புள்ளிகள்)

4) i) பிரான்சியப் புரட்சியின் தோற்றத்திக்கு வழிவகுத்த பிரதான காரணங்களை ஆராய்க.

ii) பிரான்சியப்புரட்சி பிரான்ஸிலும் ஐரோப்பாவின் ஏனைய நாடுகளிலும் ஏற்படுத்திய தாக்கத்தை பரிசீலனை செய்க.

(16 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

5) பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டிற்கு அவற்றின் வரலாற்று முக்கியத்துவம் தொடர்பாக சிறுகுறிப்பு எழுதுக.

i) கிரேக்க நகர அரசுகள்.

ii) போர்த்துகல்லின் நாடுகாண் பயனங்கள்.

iii) 'றிச்சிலியூவின் உள்நாட்டு வெளிநாட்டு கொள்கை.

iv) கைத்தொழில் புரட்சி

(ஒவ்வொன்றுக்கும் 8 புள்ளிகள்)

## பகுதி C

6) "நெப்போலியன் பொனபாட் ஐரோப்பாவின் தலைசிறந்த அரசியல்ஞானிகளில் ஒருவனாகக் கொள்ளப்படுகின்றான்"

i) நெப்போலியன் பொனபாட் பிறந்த இடத்தை குறிப்பிடுக. (1 புள்ளி)

ii) பிரான்சிலே சக்கரவர்த்தி ஆவதற்கு முன் நெப்போலியன் தலைமையிலே நடைபெற்ற அயல்நாட்டு படையெடுப்புகள் யாவை? (2 புள்ளிகள்)

iii) சக்கரவர்த்தியாவதற்கு முன்பு நெப்போலியன் பொனபாட் பெற்றிருந்த முக்கியமான அரசியல் பதவிகள் யாவை? (2 புள்ளிகள்)

iv) நெப்போலியன் பொனபார்ட் கடைப்பிடித்த உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளின் அடிப்படையில் அவனும் ஒரு தலைசிறந்த அரசியல் மேதையாக கொள்ளலாமா என்பதை பரிசீலனை செய்க. (11 புள்ளிகள்)

7) "இத்தாலியினை இணைப்பதற்கான இயக்கத்தின் பிரதான கட்டங்களை விளக்கி இத்தாலியை இணைப்பதில் மஸினி கபூர், கரிபோல்டி ஆகியோர் கொண்டிருந்த பங்கினை மதிப்பிடுக." (16 புள்ளிகள்)

agaram.lk

8) ஐரோப்பா இரண்டு பகைமையுடைய அணிகளாகப் பிரிந்தமையே உலகப்போருக்கு ஏதுவான பிரதான காரணமாகும்.

i) முதலாம் உலகப்போர் காலத்தில் ஜேர்மனின் சக்கரவர்த்தியாக காணப்பட்டவர யார்? (1 புள்ளி)

ii) முதலாம் உலகப்போருக்கான உடனடிக்காரணம் என்ன? (1 புள்ளி)

iii) ஐரோப்பா இரண்டு பகைமை அணிகளாக பிளவுற்றிருந்தமை பற்றி ஒரு சிறுகுறிப்பு தருக. (6 புள்ளிகள்)

iv) முதலாம் உலகப்போர் ஏற்படுவதற்கு ஏதுவான எல்லா காரணங்களினதும் அடிப்படையில் மேற்குறித்த கூற்றினை பரிசீலனை செய்க. (8 புள்ளிகள்)

9) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினது வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக?

i) ஜேர்மன் ஐக்கியம்

ii) ரஷ்யப்புரட்சி (1917 ஆகஸ்ட்)

iii) பனிப்போர்

iv) ஐக்கிய நாடுகள் தாபனம்

(ஒவ்வொன்றுக்கும் 8 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk


www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
ஆறாம் தவணைப் பரீட்சை - 2021

# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Examination - 2021

FWC

## ஐரோப்பா வரலாறு




Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk